# பரத நாட்டியம்

## தரம் 9

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)



அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை
www.nie.lk
info@ni.lk

# பரத நாட்டியம்

## ஆசிரியர் வழிகாட்டி
## தரம் 9

**(2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

**அழகியற்கல்வித் துறை,**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம**
**இலங்கை.**
**www.nie.lk**
**info@ni.lk**

பரத நாட்டியம்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 9
பாடத்திட்டம் - 2018

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

முதற் பதிப்பு : 2018
தேசிய கல்வி நிறுவகம்

அழகியற் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

***அச்சுப் பதிப்பு:***
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்குமான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப் பெறுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு, பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்றுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர் களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : | கல்விசார் அலுவல்கள் சபை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| பாட நிபுணத்துவ ஆலோசனை | : | திரு. சுதத் சமரசிங்ஹ<br>பணிப்பாளர் - அழகியற்கல்வித் துறை |
| பாட இணைப்பாக்கம் | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்<br>செயற்றிட்டத் தலைவர்<br>அழகியற்கல்வித் துறை |
| எழுத்தாளர் குழு<br>(உள்வாரி) | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்<br>செயற்றிட்டத் தலைவர்<br>அழகியற்கல்வித் துறை |
| (வெளிவாரி) | | திருமதி பாரதி சிவயோகநாதன்<br>ஆசிரிய ஆலோசகர்<br>வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு - 02. |
| மொழி மேற்பார்வை | : | திரு.த. முத்துக்குமாரசாமி<br>ஓய்வு நிலை அதிபர்<br>கொ/இந்துக் கல்லூரி<br>பம்பலப்பிட்டி. |
| கணினி கோர்ப்பும் வடிவமைப்பும் | : | செல்வி க.தாட்ஷாயனி |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | திரு. ரவீந்ர தேநுவர |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்

2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 8இற்கான பரதநாட்டிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தற் செயன்முறையை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் வழிகாட்டி உங்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

- ❖ பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக நேரமுகாமை செய்தல்.

- ❖ 5 தேர்ச்சிகளின் கீழ், வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறைத் தேர்ச்சிகளின் மட்டங்களுக்காக மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்தத் தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விதந்துரைக்கப்பட்டுள்ள 5 தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, திட்டமிட்டுச் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

- ❖ தாமே 5 செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனமெடுப்பது பயனுடையதாகும்.
    - ➢ அழகியல் சார்ந்த அன்றேல் பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்வைப்பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரைப் பாடத்தின் பால் ஈர்த்தல். முன்நிலை மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
    - ➢ மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலைக் கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
    - ➢ முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள், ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பாடத்தை நிறைவு செய்தல்.
    - ➢ இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் மாணவர் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை மேலும் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

- ❖ அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

- ❖ பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு மூன்று தவணைக்குரிய செயற்பாட்டினை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

| தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் : 1.1.1, 2.1.1, 3.1.1, 3.2.1 3.2.4, 3.4.2, 4.2.1, 4.3.1, 5.1.1 | செயற்பாட்டு இலக்கம் : 1.2.1, 2.2.1, 3.1.2, 3.2.2, 3.2.5, 3.3.1 4.1.1, 4.2.2, 5.2.1 | செயற்பாட்டு இலக்கம் : 1.3.1, 2.3.1, 3.1.3, 3.2.3, 3.2.6, 3.5.1, 4.3.2 4.2.3, 5.3.1 |

**தேர்ச்சி 1:0 : நயத்தல்**

- நயத்தல் தொடர்பான கற்பித்தலை மேற்கொள்ளும் போது, மாணவர்களின் இரசனையைத் தூண்டி அவர்களின் வெளிப்பாட்டை வெளிக்கொண்டு வரவேண்டும். அதற்குக் கவர்ச்சியான முறையில் கற்பித்தற் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

**தேர்ச்சி 2:0 : ஆக்கத்திறன்**

- ஆக்கத்திறனில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது, அவர்களுக்குரிய வழிகாட்டல்கள் மாத்திரம் ஆசிரியரினால் வழங்கப்பட வேண்டுமேயல்லாமல் எச் சந்தர்ப்பத்திலும் ஒரு நிகழ்வு ஆசிரியரினால் ஆக்கி வழங்கப்படக் கூடாது.

- அனைத்தும் மாணவர்களின் சொந்தக் கற்பனையாகவே இருக்க வேண்டும்.

**தேர்ச்சி 3:0 : செய்முறை**

- செய்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்தும் போது, பாத அசைவுகளில் குறித்த தேர்ச்சி மட்டத்தை அடைந்த பின்பு தான் கை அசைவுகளுக்குரிய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- பாடவேளை போதாதவிடத்து மேலதிக வகுப்புக்களை நடத்தி மாணவர்களைக் குறித்த மட்டத்தை அடையச் செய்ய வேண்டும்.

- முதலில் காற்செய்கையையும், பின்னர் கைச் செய்கையையும் தனித்தனியாகப் பயிற்சியளித்துத் தொகுத்தல் வேண்டும்.

**தேர்ச்சி 4:0 : அறிமுறை**

- அறிமுறைப் பாடப்பகுதிகள் அனைத்திற்கும் அன்றைய தினக் கற்றல் நடைபெற்று முடிந்த பின்பு மணவர்கள் குறிப்பெடுத்திருத்தல் அவசியமாகும்.

- குறிப்புக்கள் திருத்தப்பட்டு மாணவர்கள் அவற்றை வீட்டில் விரிவான வசன ஆக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- அதன் பின்புதான் தேவையேற்படின் ஆசிரியர்கள் விரிவான விளக்கக் குறிப்பு வழங்க வேண்டும்.

- எக்காரணம் கொண்டும் ஆசிரியர் வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புக்கள் அப்படியே மாணவர்களுக்கு வழங்கப்படலாகாது.

- அத்துடன், ஆசிரியரின் தேடலும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- அடவுகள், உருப்படிகளுக்கான குறியீட்டு முறை விளக்கம் அளிக்கப்படும் போது, முதலில் ஒவ்வொரு தட்டிற்குமுரிய சொற்கட்டுக்கள் கீழ்காட்டியவாறு எழுதப் பயிற்றுவிக்கவும்.

  **உ+ம் தா தெய் தெய்த அடவு**

# உள்ளுறையாக

**பக்கம்**


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| கலைத்திட்டக்குழு | v |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | vi - vii |
| உள்ளுறையாக | viii |
| அறிமுகம் | ix - x |
| • தேசிய இலக்குகள் | xi |
| • அடிப்படைத் தேர்ச்சிகள் | xii- xiii |
| • பாடத் தேர்ச்சிகள் | xiv |
| பாடத்திட்டம் | xv - xx |
| கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆவோசனைகள் | |
| தவணை I | 01 - 11 |
| தவணை II | 12 - 22 |
| தவணை III | 23 - 34 |

# அறிமுகம்

ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து கொண்டு, கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் 6ஆம் தரத்தில் கல்வியைக் கற்கவரும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாகப் புதிய பரத நாட்டியப் பாடத்திட்டம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டங்களும் புதிய எண்ணக்கருக்களும் இக்கலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய கவின் கலைகள், ஒன்றிணைந்த பாடமாகக் கற்பிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டிலிருந்து இக்கலைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக 6ஆம் தரத்தில் இரசித்தல், ஆக்கத்திறன், செய்முறை, அறிமுறை கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றற் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு புதிய சாகரத்தின் இரண்டாம் கலைத்திட்டமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

தற்கால உலகில் மாற்றமடையாத ஒன்று மாற்றம் ஆகும். அதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எந்தவொரு கலைத்திட்ட மறுசீரமைப்பும் இரண்டு அம்சங்களில் மாற்றங்களைப் பிரேரிக்கின்றது.

(1) பாடச் சேர்க்கை - பாடக்கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல், பாடவிடயங்களை இற்றைப்படுத்தல்

(2) பாடவிடயங்களை மாணவரிடம் கொண்டு சேர்ப்பதற்காக முன்வைக்கப்படும் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை

மாணவர் மையக் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்ற இப்புதிய கலைத்திட்டமானது, மாணவர்களும் ஆசிரியரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்களின் தேடிக் கற்றலை ஊக்குவிப்பதற்குரிய செயற்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவும், கற்றல் - கற்பித்தல் என்பவற்றைத் தெளிவாகப் புரிந்து தாமே விருப்பத்தோடு ஈடுபடுவதற்கு ஏற்றவகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தற்காலக் கல்விமுறையின் மூன்று தூண்களாவன:-**

(1) அறிந்துள்ளவற்றைப் பேணிவருதல்.

(2) முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விடயங்களைக் கற்றல்.

(3) ஏற்கெனவே கற்கப்பட்ட விடயத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பனவாகும்.

இச்செயற்பாடு ஏற்கெனவே அறிந்துள்ளவற்றைத் தொடர்ந்தும் மாற்றியமைத்துப் புதுமைப்படுத்தும் புதிய சமூகமொன்றை உருவாக்கும். இதுவரைகண்டறியப்படாதவை தொடர்பாக, இளம் சந்ததியினரை வழிப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். தேடலில் ஈடுபட்டு, ஏற்கெனவே அறிந்துள்ளவற்றை மாற்றியமைத்தும், இதுவரை கண்டறியப்படாதவற்றை தேடியறிவதற்கும் மாணவர்களைப் பழக்கப்படுத்துவது இப்புதிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும்.

வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான திறன்கள், ஆற்றல்களை அதாவது ஒன்றிணைந்த ஆளுமைக்கு இன்றியமையாத சிந்தனைத் திறன் (Thinking skill ), சமூகத் திறன் (Social skill ), சுயதிறன் (Personal skill ) ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரிய காலமாகப் பாடசாலைக் காலத்தில் வழங்கப்படத்தக்கவாறு தயாரிக்கப்பட்ட ஒரு பொதுவான கலைத்திட்டம் இதுவாகும்.

வந்தபின் செயற்படும் அணுகுமுறைக்குப் பதிலாக, வருமுன் செயற்படும் அணுகுமுறையைக் கைக்கொள்வது, இன்றைய எதிர்காலச் சந்ததியினருக்கு அவசியமானதொன்றாகும். எனவே, நாளைய உலகை வெற்றி பெறுவதற்காகத் தேடலை முனைப்பாகக் கொண்ட வகையில், இப்புதிய கலைத்திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்கால சமூகத்திற்குத் தேவையான ஆளுமையுடைய சமூகத்தை உருவாக்குவது இப்புதிய பாடத்திட்டத்தின் தாரக மந்திரமாகும்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப்பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை 2003)

## பாடத் தேர்ச்சிகள்

- பரத நாட்டியத்துடன் தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.
- சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.
- படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.
- தேசிய, பன்னாட்டுக் கலைகளை அறிந்து மதிப்பளிப்பார்.
- அழகியல் நயப்புடையவராவார்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கை வளர்ப்பார்.
- பண்பாட்டின்பால் பற்றுறுதியையும், மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் விருத்தி செய்வார்.
- தன்னாற்றலை இனங்கண்டு, கலை நிகழ்வுகளை ஆற்றுகைப்படுத்தும் திறனை விருத்தி செய்வார்.
- சிறந்த தொடர்பாடற் திறனை விருத்தி செய்வார்.
- தாமாக முன்வந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் திறனைப் பெறுவார்.
- இயற்கையை நயந்து வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கையாளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குவார்.
- குழுவாக இயங்கும் பண்பை விருத்தி செய்வார்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.
- சமூக அங்கீகாரம், புகழ் என்பவற்றைப் பெற்றுக் கொள்வார்.
- கலை நுணுக்கங்களை அறிந்து அதனை விபரிக்கும், விமர்சிக்கும் ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வார்.
- கலைத் தேடலின் ஊடாகப் புதிய முன்வைப்புகளுக்கு முயற்சிப்பார்.
- மூத்த கலைஞர்களுக்குக் கௌரவமளிக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வார்.

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 1 . 0 | சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார். | 1.1 கிராமிய நடனங்களுக்குரிய இசைக்கருவிகளை நயந்து வெளிப்படுத்துவார். | • கிராமிய இசைக் கருவிகள்<br>`• டோல்கி<br>• உடுக்கு<br>• ஹார்மோனியம்<br>• சல்லாரி<br>• நாதஸ்வரம்<br>• தவில்<br>• பறை | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• கிராமிய இசைக் கருவிகளை இனங்கண்டு கூறுவார்.<br>• கிராமிய இசைக் கருவிகளிலிருந்து எழுப்பப்படும் ஒலிகளின் வேறுபாடுகளை இனங்காண்பார்.<br>• இவை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுவார். | 04 |
| | | 1.2 சமய கலாசார நிகழ்வுகளை நயந்து வெளிப்படுத்துவார். | • வேடப் புனைவு<br>• வேட்டைத் திருவிழா<br>• கரோல்<br>• சூரன்போர்<br>• பெரஹரா | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• வேடப் புனைவு பற்றி எடுத்துரைப்பார்.<br>• வேட்டைத்திருவிழாவின் நோக்கத்தினையும் சூரன்போர் நடைபெறுவதன் நோக்கத்தினையும் ஆராய்ந்து கூறுவார்.<br>• கரோல், பெரஹரா ஆகிய நிகழ்வுகள் நடைபெறும் சந்தர்ப்பங்களை எடுத்துரைப்பார். | 04 |
| | | 1.3 பாடசாலைக் கலை விழாக்களில் இடம்பெறும் நடன நிகழ்ச்சிகளில் ரசித்தவற்றை வெளிப்படுத்துவார். | • பாடசாலைகளில் இடம்பெறும் கலைநிகழ்ச்சிகளை நயத்தல். | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகளை எடுத்தியம்புவர்.<br>• அவற்றின் பாடல்களைப் பாடிக்காட்டுவார். | 02 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | • நடன அமைப்பு முறையினைக் கண்டறிவார்.<br>• ஆடை, அணிகள் ஒப்பனை பற்றி விமர்சிப்பார். | |
| 2.0 | சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும், அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார். | 2.1 கற்பனை வாக்கியங்களுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார். | உதாரணம்:<br>• கோயில் மணி அடித்தது.<br>• அவள் அழகாக ஆடினாள். | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• கற்பனை வாக்கியங்களுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார். | 02 |
| | | 2.2 பாரதியார் பாடல்களுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார். | • காக்கைச் சிறகினிலே நந்தலாலா<br>• ஓடி விளையாடு பாப்பா | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• பாரதியார் பாடல்களுக்கு அபிநயம் அமைத்து முன்வைப்பார்.<br>• காக்கைச் சிறகினிலே, ஓடி விளையாடு பாப்பா என்ற பாடலுக்கு அபிநயம் அமைத்து முன்வைப்பார். | 04 |
| | | 2.3 கிராமிய நடனத்துக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார். | • கரகம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• கரகம் என்ற கிராமிய நடனத்திற்கு ஆடற்கோலங்களை அமைத்து முன்வைப்பார். | 04 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 3 . 0 | பரத நாட்டியத்துக்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், ஜாதி ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார். | 3.1 அஸம்யுத, ஸம்யுத ஹஸ்தங்களின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார். | • விநியோகம்<br>• ஒற்றைக்கை விநியோகம் (காங்கூலம் - திரிசூலம்)<br>• இரட்டைக்கை விநியோகம் அஞ்சலி - சகடம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• காங்கூலம் - திரிசூலம் வரையிலான ஒற்றைக் கை முத்திரை விநியோகங்களை அபிநயிப்பார்.<br>• அஞ்சலி - சகடம் ஆகிய முத்திரை விநியோகங்களை அபிநயிப்பார். | 11 |
| ‘ | | 3.2 பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார் | • தத்தெய்தாம் 4,5,6<br>• மண்டியடவு 1,2<br>• தாஹத்த ஜெம்தரிதா<br>• தெய் தெய் திதிதெய்<br>• திதிதெய்<br>• ததிங்கிணதொம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• தத்தெய்தாம் 4-6, தாஹதஜம் தரிதா, மண்டியடவு, ததிங்கிணதொம், தெய்தெய் திதிதெய், திதிதெய் ஆகிய அடவுகளை கொலுப்பித்து, அபிநயித்துக் காட்டுவார். | 27 |
| | | 3.3 ஹஸ்தங்களையும் பேதங்களையும் அபிநயித்துக் காட்டுவார். | • தேவஹஸ்தம்<br>• நவக்கிரக ஹஸ்தம்<br>• ஜாதி ஹஸ்தம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• தேவர்கள், நவக்கிரகங்கள், ஜாதிகள் ஆகியவர்களுக்குரிய பெயர்களைப் பட்டியற்படுத்துவர்.<br>• அவற்றிற்குரிய முத்திரைப் பிரயோகங்களை அபிநயிப்பார். | 03 |
| | | 3.4 வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை அபிநயித்துக் காட்டுவார். | • பந்து நடனம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• பந்து நடனத்தைக் கிராமியப் பாங்குடன் முன்வைப்பர்<br>• பல்வேறு கோலங்களில் அபிநயிப்பார் | 04 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 3.5 அலாரிப்பில் வரும் பிரதான செயற்பாட்டிற்கான முன் ஆயத்தப் பயிற்சி | • அலாரிப்பில் வரும் பிரதான செயற்பாட்டிற்கான முன் ஆயத்தப் பயிற்சி அட்டமி, தோள் தள்ளுதல், மண்டியவு | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• அலாரிப்பில் வரும் பிரதான செயற்பாட்டிற்கான முன் ஆயத்தப் பயிற்சியினை மேற்கொள்வார் (அட்டமி, தோள் தள்ளுதல், மண்டியடவு) | 02 |
| 4 . 0 | தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள் இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். | 4.1 ஹஸ்தங்களையும் பேதங்களையும் அறிந்து கூறுவார். | • தேவஹஸ்தம்<br>• நவக்கிரகஹஸ்தம்<br>• ஜாதி ஹஸ்தம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• தேவர்கள், நவக்கிரகங்கள் ஜாதிகள் ஆகியவற்றின் முத்திரைகளைப் பட்டியற்படுத்துவார். | 03 |
| | | 4.2 பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகட்குரிய இசைக்குறியீட்டினை அறிந்து கூறுவார். | • இசைக் குறியீட்டு விளக்கம்.<br>• தத் தெய் தாம்<br>• தாஹத்த ஜெம் தரி தா<br>• மண்டியடவு<br>• ததிங்கிண தொம்<br>• திதிதெய்<br>• தெய் தெய் திதி தெய் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• தத்தெய் தாம், தாஹதஜம்தரிதா, மண்டியடவு, ததிங்கிணதொம் தெய்தெய்திதிதெய் , திதிதெய் ஆகிய அடவுகளை இசைக்குறியீட்டுடன் எழுதுவார். | 10 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 4.3 பரதநாட்டியத்தின் எண்ணக்கருக்களை அறிந்து கூறுவார். | • அடவு<br>• கோர்வை<br>• தீர்மானம்<br>• எடுப்பு<br>• முத்திரை<br>• விநியோகம்<br>• சொற்கட்டு<br>• சபை<br>• சபா மண்டபம்<br>• சபாநாயகன்<br>• அலாரிப்பு இலட்சணம்<br>• கிண்கிணி | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• அடவு,கோர்வை,தீர்மானம், எடுப்பு, முத்திரை விநியோம், சொற்கட்டு என்பவற்றின் எண்ணக்கருவினை அறிந்து குறிப்பிடுவார்.<br>• சபை, சபாமண்டபம், சபாநாயகன், அலாரிப்பு இலட்சணம், கிண்கிணி என்பவற்றின் இலட்சணங்களைப் பட்டியற்படுத்துவார். | 07 |
| 5.0 | நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார். | 5.1 கலைவளர்த்த கலைஞர்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து அறிந்து கூறுவார். | • தஞ்சை நால்வர் பற்றிய அறிமுகம், வாழ்க்கை வரலாறும், கலைப்பணியும். | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• தஞ்சை நால்வரின் வாழ்க்கைக் குறிப்புகள், கலைப்பணி ஆகியவற்றை அறிந்து கூறுவார். | 02 |
| | | 5.2 நாட்டிய நாடகங்களின் பின்னணியை அறிந்து கூறுவார். | • நாட்டிய நாடகங்கள் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• நாட்டிய நாடகங்களின் பின்னணியை அறிந்து கூறுவார்.<br>• நாட்டிய நாடகங்களில் பல்வேறு கதைகளினை அபிநயிப்பார். | 02 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 5.3 இலங்கையின் பாரம்பரிய நடனத்தின் கலாசாரப் பின்னணியை அறிவார். | • கண்டிய நடனம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• கண்டிய நடனம் இலங்கையின் சாஸ்திரிய நடனங்களில் ஒன்று என்பதைக் குறிப்பிடுவார்.<br>• அதன் தோற்றத்தைக் கூறுவார். | 03 |

# முதலாம் தவணை

**தேர்ச்சி 1.0 :-** **சூழலைஇரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 :-** **கிராமிய நடனங்களுக்குரிய இசைக்கருவிகளை நயந்து வெயிப்படுத்துவார்.**

**செயற்பாடு 1.1.1 :-** **கிராமிய இசைக்கருவிகளான டோல்கி, உடுக்கு, ஹார்மோனியம், சல்லாரி, நாதசுரம், தவில், பறை, ஆகியவற்றின் இசையினை நயந்து வெளிப்டுத்துவோம்.**

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

கிராமிய இசைக்கருவிகள் டோல்கி, உடுக்கு, ஹார்மோனியம், சல்லாரி, நாதசுரம், தவில், பறை, ஆகியவற்றின் இசை அடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற்பேறுகள் :-**

- கிராமிய இசைக்கருவிகளை இனங்கண்டு கூறுவார்.
- கிராமிய இசைக்கருவிகளிலிருந்து எழுப்பப்படும் ஒலிகளை வேறுபாடு காண்பார்.
- இவ்விசைக்கருவிகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- கிராமிய இசைக்கருவிகளின் இசை அடங்கிய காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- பார்வையிட்ட இசைக்கருவிகளின் ஒலிகளின் வேறுபாட்டினை இனங்காணச் செய்தல்.
- இவ்விசைக்கருவிகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை இனங்காணச் செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- குறிப்பிட்ட கிராமிய இசைக்கருவிகளை இனங்கண்டு கூறுவார்.
- இவை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை அறிந்து கூறுவார்.
- இவ்விசைக்கருவிகளினால் ஏற்படுத்தப்படும் ஒலிகளை வேறுபடுத்தி இனங்கண்டு கூறுவார்.

**தேர்ச்சி 2.0 :-** **சூழலில் நாம் பார்த்து ரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும் அபிநயித்து ஆற்றுகைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 :-** **கற்பனை வாக்கியங்களுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார்.**

**செயற்பாடு 2.1.1 :-** **கோயில் மணி அடித்தது, அவள் அழகாக ஆடினாள் போன்ற கற்பனை வாக்கியங்களுக்கு அபிநயிப்போம்.**

**பாடவேளைகள் :-** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

- கற்பனை வாக்கியங்கள் சில தெரிவார்.
- அவ் வாக்கியங்களுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- அவ் வாக்கியங்களுக்கு அபிநயம் செய்யும் முறை பற்றிக் கலந்துரையாடல்.
- அவ் வாக்கியங்களுக்கு மாணவர் அபிநயித்தல்.
- மாணவர் தொகைக்கேற்ப குழுவாகவும், தனியாகவும் அபிநயிக்கச் சந்தர்ப்பம் வழங்கல்.
- அதனை அவதானித்து வாக்கியங்களுக்கு முத்திரைகளுடன் அபிநயிக்க நெறிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- வாக்கியங்களுக்கு ஏற்ப முத்திரைகளைப் பிரயோகிப்பார்.
- அதற்கேற்ப அபிநயத்தையும் வெளிப்படுத்துவார்.
- இதனைப் போன்று வேறு வாக்கியங்களுக்கும் அபிநயிப்பார்.

**தேர்ச்சி 3.0 :-** **பரதநாட்டியத்திற்குரிய ஆரம்ப பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும், ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :-** **அஸம்யுத, ஸம்யுத ஹஸ்தங்களின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.**

**செயற்பாடு 3.1.1 :-** **காங்கூலம் தொடக்கம் ப்ரமரம் வரையிலான ஹஸ்தங்களின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவோம்.**

**பாடவேளைகள் :-** 04

**தரவிரத்தி உள்ளீடுகள் :-**

**இறுவட்டு, ஒளிப்பதிவுக் கருவி, எழுதப்பட்ட அட்டைகள்.**

**கற்றற்பேறுகள் :-**

- காங்கூலம் தொடக்கம் ப்ரமரம் வரையிலான விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- அவற்றின் பொருள் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- ஏற்கனவே விநியோகங்களுக்கு மேற்கொண்ட செயல் ஒழுங்கை மேற்கொள்ளவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- காங்கூலம் தொடக்கம் ப்ரமரம் வரையிலான ஹஸ்தங்களின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- சரியான உச்சரிப்புடன் வெளிப்படுத்துவார்.
- விநியோகங்களின் பொருள் கூறுவார்.

**தேர்ச்சி 3.0 :-** **பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 :-** **பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.**

**செயற்பாடு 3.2.1 :-** **4 - 6 வரையுள்ள தத்தெய்தாம் அடவுகளை கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவோம்.**

**பாடவேளைகள் :-** 08

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**தட்டுக்கழி, தட்டுப்பலகை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

- 4 - 6 வரையுள்ள தத்தெய்தாம் அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- ஏற்கனவே கற்ற தத்தெய்தாம் 1 - 3 வரை நினைவு கூர்ந்து பயிற்சியளித்தல்.
- 4, 5, 6 ஆவது அடவுகளில் பிரயோகிக்கப்படும் முத்திரைகள், பாதநிலைகள், அங்கநிலைகள் பற்றி கலந்துரையாடுதல்.
- 4 ஆவது அடவின் காற் செய்கையினை ஆசிரியர் அபிநயித்துக் காட்டுவதுடன் மாணவர் அதனை அவதானித்து அபிநயித்தல்.
- தொடர்ந்து கைப்பயிற்சியைச் செய்தல்.
- முதலில் விளம்ப, மத்திம, காலங்களிலும், பின்னர் துரிதகாலத்திலும் பயிற்சி அளித்தல்.
- 4 ஆவது தத்தெய்தாம் கற்பித்தற் செயலொழுங்கின் பிரகாரம் அடவுகள் 5,6 இனைச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு அடவினை ஒவ்வொரு குழு அபிநயிக்க மறுகுழு கொலுப்பித்தலும் கருத்துக் கூறலும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- 4 - 6 வரையான தத்தெய்தாம் அடவுகளுக்குப் பிரயோகிக்கும் முத்திரைகளை அபிநயித்துக்காட்டுவார்.
- பயன்படுத்தும் பாதநிலைகளைச் செய்து காட்டுவார்.
- அடவுகளை திரிகாலங்களிலும் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0 :-** பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :-** பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.4 :-** தெய் தெய் திதிதெய் அடவினைக் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவோம்.

**பாடவேளைகள் :-** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

தட்டுக்கழி, தட்டுப்பலகை, தாளம் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற்பேறுகள் :-**

- தெய் தெய் திதிதெய் அடவினை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- பாதநிலை, முத்திரை பற்றிக் கலந்துரையாடல்.
- அடவின் காற்செய்கையினை ஆசிரியர் அபிநயித்துக்காட்ட மாணவர் அதனை அவதானித்து அபிநயித்தல்.
- கை பயிற்சி செய்தல்.
- அடவுகளுக்கான கற்பித்தற் செயலொழுங்கை மேற்கொள்ளவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- அடவின் பாதநிலைகளைக் கூறுவார்.
- முத்திரைகளைக் கூறுவார்.
- மூன்று காலங்களிலும் கொலுப்பித்து ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி 3.0 :-** **பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.4 :-** **வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை அபிநயித்துக் காட்டுவார்.**

**செயற்பாடு 3.4.2 :-** **பந்து நடனத்தை அபிநயித்துக் காட்டுவோம்.**

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**இறுவட்டு, ஒளிப்பதிவுக் கருவி, தட்டுக்கழி, தட்டுப்பலகை,**

**கற்றற்பேறுகள் :-**

- பாடலைத் தெரிவார்.
- பாடலை மெட்டுடன் பாடுவார்.
- அடவுகளைக் கிராமியப் பாங்குடன் அபிநயிப்பார்.
- கோலங்களில் அபிநயிப்பார்.
- பயிற்சி செய்வார்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- பந்து நடனத்தை கிராமியப்பாங்குடன் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 4.0 :-** **தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 :-** **பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகட்குரிய இசைக்குறியீட்டினை அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 4.2.1 :-** **தத்தெய்தாம் அடவுகளைத் தாள அங்கக் குறியீட்டில் எழுதுவோம்.**

**பாடவேளைகள் :-** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

தத்தெய்தாம் அடவின் தாள அங்கக்குறியீடு எழுதப்பட்ட அட்டை.

**கற்றற்பேறுகள் :-**

- தத்தெய்தாம் அடவுகளின் தாள அங்கக் குறியீடுகளை எழுதுவார்.
- தத்தெய்தாம் அடவின் மறுபெயர்களைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- மாணவர் ஏற்கனவே வகுப்பறையில் செய்முறைப் பகுதியில் கற்ற தத்தெய்தாம் அடவினை மீட்டல் செய்து கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- இவ்வடவின் சொற்கட்டை ஆசிரியர் கொலுப்பித்துக்காட்டி கீழ்வரும் விடயங்களை நினைவுபடுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுதல்.
- ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
- தாள அங்கங்களுக்குள் அடங்கும் சொற்கட்டுகளை மாத்திரம் எழுதுவதற்குப் பயிற்றுவித்தல்.
- லகுவில் அடங்கும் சொற்கட்டினை ஆசிரியர் போட்டுக்காட்ட மாணவர் அவதானித்துக் குறிப்பெடுத்தல்.
- இதே போன்று மத்திம, துரிதகாலங்களில் சொற்கட்டினை எழுதப்பணித்தல்.
- மாணவர் சுயமாக எழுத இடமளித்து ஆசிரியர் அவதானித்தல்.
- பின் தங்கிய மாணவரை அவதானித்து நெறிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- தத்தெய்தாம் அடவின் சொற்கட்டினைக் கூறுவார்.
- தத்தெய்தாம் அடவினைத் தாள அங்கக் குறியீட்டில் எழுதுவார்.

**தேர்ச்சி 4.0 :-** **தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள் இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 :-** **பரதநாட்டியத்தின் எண்ணக்கருக்களை அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 4.3.1 :-** **அடவு, கோர்வை, தீர்மானம், எடுப்பு, முத்திரை, விநியோகம், சொற்கட்டு முதலிய எண்ணக்கருக்களை அறிந்து கொள்வோம்.**

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**சுருக்கக் குறிப்பு எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

- அடவு, கோர்வை, தீர்மானம், எடுப்பு, முத்திரை, விநியோகம் சொற்கட்டு என்பவற்றின் எண்ணக்கருவினை அறிந்து குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- சுருக்கக்குறிப்பு எழுதப்பட்ட அட்டைகளைக் காட்சிப்படுத்தல்.
- ஆசிரியர் மாணவருடன் கலந்துரையாடல்.
- சுருக்கக் குறிப்பினை மாணவர் எடுக்க வழிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- அடவு, கோர்வை, தீர்மானம், எடுப்பு, முத்திரை, விநியோகம், சொற்கட்டு போன்றவற்றின் எண்ணக்கருக்களை விளக்குவார்.

**தேர்ச்சி 5.0 :-** **நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 :-** **கலைவளர்த்த கலைஞர்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 5.1.1 :-** **கலைவளர்த்த கலைஞர்களில் தஞ்சை நால்வரின் வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வோம்.**

**பாடவேளைகள் :-** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

தஞ்சை நால்வர் பற்றிய குறிப்புக்கள்.

**கற்றற்பேறுகள் :-**

- தஞ்சை நால்வரின் வாழ்க்கைக் குறிப்புகள் பற்றி அறிந்து கூறுவார்.
- தஞ்சை நால்வரின் கலைப் பணிகளை ஆராய்ந்து கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- தஞ்சை நால்வர் பற்றிய குறிப்புக்களைக் காட்சிப்படுத்தல்.
- தஞ்சை நால்வரின் வாழ்க்கைக் குறிப்புகள் பற்றிக் கலந்துரையாடல்.
- தஞ்சை நால்வர் கலைக்கு ஆற்றிய பணிகள் பற்றிக் கலந்துரையாடல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- தஞ்சை நால்வரின் வாழ்க்கைக் குறிப்புக்களை அறிந்து கொள்வார்.
- தஞ்சை நால்வரின் கலைப்பணிகளைப் பட்டியற்படுத்துவார்.

# இரண்டாம் தவணை

**தேர்ச்சி 1.0 :-** **சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 :-** **சமய கலாச்சார நிகழ்வுகளை நயந்து வெளிப்படுத்துவார்.**

**செயற்பாடு 1.2.1 :-** **சமய கலாச்சார நிகழ்வுகளை நயந்து வெளிப்படுத்துவோம்.**

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

வேட்டைத்திருவிழா, கரோல், சூரன் போர் பெரஹரா முதலிய சமய நிகழ்ச்சிகள் உள்ளடங்கிய காணொளி இறுவட்டு இவை தொடர்பான சுருக்கக் குறிப்புக்கள்.

**கற்றற்பேறுகள் :-**

- வேடப்புனைவு பற்றிக் கூறுவார்.
- வேட்டைத் திருவிழா, சூரன்போர் நடைபெறுவதன் நோக்கத்தினைக் கூறுவார்.
- கரோலில் இடம் பெறும் இசைக்கருவிகளை இனங்கண்டு கூறுவார்.
- பெரகரா நிகழ்வுகளில் இடம் பெறும் இசை, நடனங்களை இனங்கண்டு கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- சமய கலாச்சார நிகழ்வுகளைப் பற்றிக் கலந்துரையாடல்.
- சமய கலாச்சார நிகழ்வுகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களைக் கலந்துரையாடல்.
- சுருக்ககுறிப்பு எடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- வேட்டைத்திருவிழா, சூரன்போர் ஆகிய சமய கலாச்சார விழாக்களின் நோக்கத்தினை அறிந்து கூறுவார்.
- கரோலில் இடம்பெறும் இசை, பற்றி அறிந்து கூறுவார்.
- பெரஹராவில் இடம்பெறும் நிகழ்வுகள் பற்றிக் கூறுவார்.

**தேர்ச்சி 2.0 :-** **சூழலில் நாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும் அபிநயித்து ஆற்றுகைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 :-** **பாரதியார் பாடலுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார்.**

**செயற்பாடு 2.2.1 :-**

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா"
"ஓடி விளையாடு பாப்பா" எனும் பாடல்களைப் பாடி அபிநயிப்போம்.

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**பாடல்கள் எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

- காக்கைச் சிறகினிலே நந்தலாலா, ஓடி விளையாடு பாப்பா ஆகிய பாடல்கள் எழுதிய அட்டைகளைக் காட்சிப்படுத்தல்.
- ஆசிரியர் பாடலைப் பாட மாணவர் சேர்ந்து பாடுதல்.
- ஆசிரியரும் மாணவரும் இணைந்து இராக தாளத்துடன் முழுமையாகப் பாடுதல்.
- மாணவரைக் குழுவாகவும், தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்கல்.
- மாணவர்களின் தொகைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்துப் பாடல்களுக்கு அபிநயம் அமைக்க வழிப்படுத்துதல்.
- மாணவர்களைக் குழுவாக இயங்கவிட்டு ஆசிரியர் அவதானித்தல்.
- பாடல்களின் பொருளுக்கேற்ப முத்திரைகளை அபிநயிக்க நெறிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- காக்கைச் சிறகினிலே நந்தலாலா, ஓடி விளையாடு பாப்பா ஆகிய பாடல்களைப் பாடுவார்.
- பாடலுக்கு ஏற்ப அபிநயம் செய்து காட்டுவார்.
- பாடல்களின் பொருள் கூறுவார்.

**தேர்ச்சி 3.0 :-** பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :-** அஸம்யுத, ஸம்யுத ஹஸ்தங்களின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.1.2 :-** ஹம்ஸாஸ்யம் - திரிசூலம் வரையிலான ஹஸ்தங்களின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

இறுவட்டு ஒளிப்பதிவுக் கருவி.

**கற்றற்பேறுகள் :-**

ஹம்ஸாஸ்யம் - திரிசூலம் வரையிலான ஹஸ்தங்களின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவோம்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- ஏற்கனவே விநியோகங்களுக்கு மேற்கொண்ட செயல் ஒழுங்கை மேற்கொள்ளவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- ஹம்ஸாஸ்யம் தொடக்கம் திரிசூலம் வரையிலான ஹஸ்தங்களின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- சரியான உச்சரிப்புடன் வெளிப்படுத்துவார்.
- விநியோகங்களின் பொருள் கூறுவார்.

**தேர்ச்சி 3.0 :-** **பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 :-** **பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.**

**செயற்பாடு 3.2.2 :-** **1 - 2 வரையான மண்டியடவுகளை கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவோம்.**

**பாடவேளைகள் :-** 05

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**தட்டுக்கழி, தட்டுப்பலகை தாளம் எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

- 1 - 2 வரையான மண்டியடவினை கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- மாணவருடன் கலந்துரையாடல்.
- பாதநிலை, முத்திரைகள் பற்றிக் கலந்துரையாடல்.
- முதலாவது அடவின் காற் செய்கையினை ஆசிரியர் அபிநயித்துக் காட்டுவதுடன் மாணவர் அதனை அவதானித்து அபிநயித்தல்.
- கைப்பயிற்சி செய்தல்.
- மூன்று காலங்களிலும் பயிற்சி அளித்தல்.
- முதலாவது மண்டியடவின் கற்பித்தற் செயலொழுங்கின் பிரகாரம் 2ஆவது அடவினை செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து அடவினை ஒவ்வொரு குழுவும் அபிநயிக்க மறுகுழு கொலுப்பித்துக் கருத்துக் கூறலும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- மண்டியடவில் இடம்பெறும் பாத நிலைகளைக் கூறுவார்.
- பிரயோகிக்கும் முத்திரைகளைக் கூறுவார்.
- அடவுகளைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0 :-** **பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 :-** **பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.**

**செயற்பாடு 3.2.5 :-** **திதிதெய் அடவினைக் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவோம்.**

**பாடவேளைகள் :-** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**தட்டுக்கழி, தட்டுப்பலகை, தாளக்குறியீட்டில் எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

திதிதெய் அடவினைக் கொழுப்பித்து அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

அடவுகளுக்கான கற்பித்தற் செயலொழுங்கை மேற்கொள்ளவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- அடவின் பாதநிலைகளையும் பிரயோகிக்கும் ஹஸ்தங்களையும் கூறுவார்.
- மூன்று காலங்களிலும் கொலுப்பித்து ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி 3.0 :-** **பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும். அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.3 :-** **ஹஸ்தங்களையும் பேதங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.**

**செயற்பாடு 3.3.1 :-** **தேவ, நவக்கிரக, ஜாதி ஹஸ்தங்களை அபிநயித்துக் காட்டுவோம்.**

**பாடவேளைகள் :-** 03

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**ஹஸ்தங்கள் எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

தேவ, நவக்கிரக, ஜாதி ஹஸ்தங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- அறிமுறையில் கற்ற விடயங்களை நினைவு கூர்ந்து மீட்டல்.
- தேவ ஹஸ்தங்களை ஆசிரியர் அபிநயித்துக் காட்ட மாணவர் அபிநயிப்பர்.
- இவ்வாறே நவக்கிரக, ஜாதி ஹஸ்தங்களை அபிநயிப்பார்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- தேவஹஸ்தங்களை அபிநயிப்பார்.
- நவக்கிரகஹஸ்தங்களை அபிநயிப்பார்.
- ஜாதிஹஸ்தங்களை அபிநயிப்பார்.
- ஹஸ்தங்களை இனங்காண்பார்.

**தேர்ச்சி 4.0 :-** **தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 :-** **ஹஸ்தங்களையும் பேதங்களையும் அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 4.1.1 :-**

- **தேவஹஸ்தம், நவக்கிரக ஹஸ்தம், ஜாதி ஹஸ்தங்களையும் அறிந்து கொள்வோம்.**

**பாடவேளைகள் :-** 03

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**ஹஸ்தங்கள் எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

- தேவ, நவக்கிரக, ஜாதி ஹஸ்தங்களைக் குறிப்பிடுவர்.
- பாத நிலைகளையும் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- ஹஸ்தங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- தனித்தனியான ஒவ்வொரு தேவ, நவக்கிரக ஜாதிக்குரிய வலதுகை, இடதுகை, பாத நிலைகளுடன் எழுதுவதற்கு வழிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- தேவ, நவக்கிரக, ஜாதி ஹஸ்தங்களைக் குறிப்பிடுவார்.
- இவற்றின் பாதநிலைகளையும் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0 :-** **தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 :-** **பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுக்கட்குரிய இசைக்குறியீட்டினை அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 4.2.2 :-** **தாஹத்தஜெம்தரிதா, திதிதெய், தெய் தெய் திதிதெய் அடவுகளைத் தாள அங்கக்குறியீட்டில் எழுதுவோம்.**

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**தாஹத்தஜெம்தரிதா, திதிதெய், தெய் தெய் திதிதெய் அடவுகளின் தாள அங்கக்குறியீடு எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

- தாஹத்தஜெம்தரிதா, திதிதெய், தெய் தெய் திதிதெய் அடவுகளைக் கொலுப்பித்துக் காட்டுவார்.
- தாஹத்தஜெம்தரிதா, திதிதெய், தெய் தெய் திதிதெய் அடவுகளின் தாள அங்கக்குறியீடுகளை எழுதுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- மாணவர்கள் ஏற்கனவே வகுப்பறையில் செய்முறைப்பகுதியிற் கற்ற தாஹத்தஜெம்தரிதா, திதிதெய், தெய் தெய் திதிதெய் ஆகிய அடவுகளை மீட்டல் செய்து கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- இவ்வடவுகளின் சொற்கட்டை ஆசிரியர் கொலுப்பித்துக்காட்டிக் கீழ்வரும் விடயங்களை நினைவு படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தல்.
- தாஹத்தஜெம்தரிதா அடவு ரூபக தாளத்திலமைந்துள்ளது.
- ரூபகதாளத்தின் அங்க அடையாளம் துருதம், லகு ஆகும்.
- இதன் மொத்த அட்சரம் ஆறு.
- ரூபகதாளத்தினை ஆசிரியர் கொலுப்பித்துக் காட்டுதலும் மாணவர் அவதானித்துக் கொலுப்பித்தலும்.

- தெய் தெய் திதிதெய், திதிதெய் அடவுகள் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.

- முதலில் தாள அங்கங்களுக்குள் அடங்கும் சொற்கட்டுகளை மாத்திரம் எழுதுவதற்குப் பயிற்றுவித்தல்.

- ஆசிரியர் சொற்கட்டினைப் போட்டுக்காட்ட மாணவர் அவதானித்துக் குறிப்பெடுத்தல்.

- இதே போன்று மத்திம துரித காலங்களில் சொற்கட்டினை எழுதப்பணித்தல்.

- மாணவர் சுயமாக எழுத இடமளித்து நெறிப்படுத்தல்.

- இவ்வாறே திதிதெய், தெய் தெய் திதிதெய் அடவுகளிற்குமான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- தாஹத்தஜெம்தரிதா, திதிதெய், தெய் தெய் திதிதெய் அடவுகளின் சொற்கட்டினைக் கூறுவார்.

- ரூபக தாளம், ஆதிதாளத்தின் அட்சரங்களைக் குறிப்பிடுவார்.

- தாஹத்தஜெம்தரிதா, திதிதெய், தெய் தெய் திதிதெய் அடவுகளைத் தாள அங்கக்குறியீட்டில் எழுதுவார்.

**தேர்ச்சி 5.0 :-** **நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 :-** **நாட்டிய நாடகங்களின் பின்னணியை அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 5.2.1 :-** **நாட்டிய நாடகங்களின் பின்னணியை அறிந்து கொள்வோம்.**

**பாடவேளைகள் :-** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

- நாட்டிய நாடகம் பற்றிய குறிப்புக்கள்.
- காணொளி இறுவட்டு.

**கற்றற்பேறுகள் :-**

- நாட்டிய நாடகங்களின் பின்னணியை அறிந்து கூறுவார்.
- நாட்டிய நாடகங்களின் கதையினை, பாத்திரத்தினை இனங்காண்பார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- காணொளி இறுவட்டினைக் காட்சிப்படுத்தல்.
- பார்வையிட்ட நாட்டிய நாடகங்களின் பின்னணியைப் பற்றிக் கலந்துரையாடல்.
- சுருக்கக் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- நாட்டிய நாடகங்களின் பின்னணியைப் பற்றி அறிந்து கூறுவார்.
- நாட்டிய நாடகத்தில் வரும் பாத்திரங்களை இனங்கண்டு கூறுவார்.

# மூன்றாம் தவணை

**தேர்ச்சி 1.0 :-** **சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 :-** **பாடசாலைக் கலைவிழாக்களில் இடம் பெறும் நடன நிகழ்ச்சிகளில் ரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.**

**செயற்பாடு 1.3.1 :-** **பாடசாலைகளில் இடம் பெறும் நடன நிகழ்ச்சிகளை நயப்போம்.**

**பாடவேளைகள் :-** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

பாடசாலையில் இடம்பெற்ற கலை, சமய நிகழ்ச்சிகளின் காணொளி இறுவட்டு

**கற்றற்பேறுகள் :-**

- பாடசாலைகளில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகளை விமர்சிப்பார்.
- அவற்றின் பாடல்களைப் பாடிக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- காணொளி இறுவட்டினைக் காட்சிப்படுத்தல்.
- கலை நிகழ்ச்சி பற்றிக் கலந்துரையாடல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- கலைநிகழ்ச்சிகளில் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.
- கலைநிகழ்ச்சிகளின் பாடல்களைப் பாடிக்காட்டுவார்.

**தேர்ச்சி 2.0 :-** **சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும் அபிநயித்து ஆற்றுகைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3 :-** **கிராமிய நடனத்துக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார்.**

**செயற்பாடு 2.3.1 :-**

**கரகம் எனும் கிராமிய நடனத்திற்கு நடனம் அமைத்து அபிநயிப்போம்.**

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

கரகப்பாடல் அடங்கிய இறுவெட்டு, பாடல் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற்பேறுகள் :-**

- கரகப் பாடலினை இராகத்துடன் பாடுவார்.
- பல்வேறு கோலங்களில் ஆடற்கோலங்களை அமைப்பார்.
- பக்தியுடன் கூடிய கிராமிய நடனம் என உணர்ந்து செயற்படுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- குறித்த பாடல் இறுவட்டினை ஒலிக்கச் செய்து அவதானிக்கச் செய்தல்.
    - பாடலை ஆசிரியர் பாட மாணவர் செவிமடுத்தல்.
    - ஆசிரியர் பாடலைப் பாட மாணவர்கள் சேர்ந்து பாடுதல்.
    - ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து முழுமையாகப் பாடுதல்.
    - மாணவர் தொகைக்கேற்ப குழுக்களைப் பிரித்து பாடலைப் பாடியவாறு கரக நடனத்தை ஆக்க வழிப்படுத்தல்.

- பல்வேறு கோலங்களில் பக்தி பூர்வமாக கரகத்தை தலையில் தாங்கி ஆடலை அமைக்க வழிகாட்டல்.

- குழுவாக ஆடலில் ஈடுபடும் போது மற்றைய குழு அவதானித்துக் கருத்துக் கூறுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- பாடலை இசையுடன் பாடுவர்.

- பாடலைப் பாடியவாறு கரக நடனத்தினைப் பக்தியுடன் ஆற்றுகைப் படுத்துவர்.

- பல்வேறு கோலங்களில் ஆடுவர்.

- குழுவினரை ஆக்க பூர்வமாக விமர்சிப்பர்.

**தேர்ச்சி 3.0 :-** **பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும் அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :-** **அஸம்யுதஹஸ்தங்களின், ஸம்யுதஹஸ்தங்களின், விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.**

**செயற்பாடு 3.1.3 :-** **அஞ்சலி தொடக்கம் சகடம் வரையிலான ஹஸ்தங்களின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவோம்.**

**பாடவேளைகள் :-** 03

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**இறுவட்டு, ஒளிப்பதிவுக்கருவி விநியோகம் எழுதப்பட்ட அட்டைகள்.**

**கற்றற்பேறுகள் :-**

- அஞ்சலி தொடக்கம் சகடம் வரையிலான விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- அவற்றின் பொருள் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

ஏற்கனவே மேற்கொண்ட கற்றல் கற்பித்தற் செயலொழுங்கை மேற்கொள்ளவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

அஞ்சலி தொடக்கம் சகடம் வரையிலான விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

- விநியோகங்களைச் சரியான உச்சரிப்புடன் வெளிப்படுத்துவார்.
- விநியோகங்களின் பொருள் கூறுவார்.

**தேர்ச்சி 3.0 :-** பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :-** பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.3 :-** தாஹத ஜெம்தரிதா அடவினை கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவோம்.

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

தட்டுக்கழி, தட்டுப்பலகை, தாளம் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற்பேறுகள் :-**

தாஹத ஜெம்தரிதா அடவினை கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- பாதநிலை, முத்திரைகள் பற்றிக் கலந்துரையாடல்.
- அடவின் காற்செய்கையினை ஆசிரியர் அபிநயித்துக் காட்ட மாணவர் அதனை அவதானித்து அபிநயித்தல்.
- கைப் பயிற்சி செய்தல்.
- மூன்று காலங்களிலும் பயிற்சி அளித்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து அடவினை ஒவ்வொரு குழுவும் அபிநயிக்க மறுகுழு கொலுப்பித்துக் கருத்துக் கூறுவர்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- தாஹத ஜெம்தரிதா அடவில் இடம்பெறும் பாதநிலைகளைக் கூறுவார்.
- பிரயோகிக்கும் முத்திரைகளைக் கூறுவார்.
- அடவினைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** :- பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** :- பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.6** :- ததிங்கிணதொம் அடவினைக் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவோம்.

**பாடவேளைகள்** :- 06

**தரவிருத்தி உள்ளீடுகள்** :-

தட்டுக்கழி, தட்டுப்பலகை, குறியீட்டில் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற்பேறுகள்** :-

ததிங்கிணதொம் அடவினைக் கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :-

- அடவுகளுக்கான கற்பித்தற் செயலொலுங்கை மேற்கொள்ளவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :-

- அடவின் பாதநிலைகளையும் பிரயோகிக்கும் ஹஸ்தங்களையும் கூறுவார்.
- மூன்று காலங்களிலும் கொலுப்பித்து ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி 3.0 :-** **பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதிஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.5 :-** **அலாரிப்பில் வரும் பிரதான செயற்பாட்டிற்கான முன் ஆயத்தப் பயிற்சி.**

**செயற்பாடு 3.5.1 :-**

**அட்டமி, தோள் தள்ளுதல், மண்டியடவுகளில் இரண்டாவது அடவு**

**பாடவேளைகள் :-** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :-** அலாரிப்பு அடங்கிய காணொளி இறுவட்டு

**கற்றற்பேறுகள் :-**

அட்டமி தோள் தள்ளுதல் மண்டியடவில் இரண்டாவது அடவு போன்றவற்றினை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- ஆசிரியர் அபிநயித்துக் காட்ட மாணவர் அதனை அவதானித்து அபிநயிப்பர்.
- மீள் பயிற்சி வழங்கல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- அலாரிப்பு செய்வதற்கு வேண்டிய ஆரம்பப் பயிற்சியைச் செய்து காட்டுவார்.
- அட்டமி.
- தோள் இழுத்தல்.
- மண்டியடவு.

**தேர்ச்சி 4.0 :-** **தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 :-** **பரதநாட்டியத்தின் எண்ணக் கருக்களை அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 4.3.2 :-** **சபை, சபாமண்டபம் சபாநாயகன், அலாரிப்பு இலட்சணம், கிண்கிணி இலட்சணம் ஆகியவற்றின் எண்ணக் கருக்களை அறிந்து கொள்வோம்.**

**பாடவேளைகள் :-** 03

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**இவ் எண்ணக்கருக்கள் சுருக்கமாக எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

சபை, சபாமண்டபம், சபாநாயகன், அலாரிப்பு இலட்சணம், கிண்கிணி இலட்சணம் ஆகியவற்றின் எண்ணக் கருக்களை அறிந்து குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- இவ்வெண்ணக்கருக்களின் சுருக்க அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- இது பற்றிக் கலந்துரையாடல்.
- குறிப்பெடுக்க வழிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- சபை, சபாமண்டபம், சபாநாயகன், அலாரிப்பு, கிண்கிணி ஆகியவற்றின் எண்ணக்கருக்களைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0 :-** **தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2.3 :-** **பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுக்கட்குரிய இசைக்குறியீட்டினை அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 4.2.3 :-** **மண்டியடவு, ததிங்கிணதொம்**

**பாடவேளைகள் :-** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

**மண்டியடவு, ததிங்கிணதொம் அடவுகளின் தாள அங்கக்குறியீடு எழுதப்பட்ட அட்டை.**

**கற்றற்பேறுகள் :-**

- மண்டியடவு, ததிங்கிணதொம் அடவுகளைக் கொலுப்பித்துக் காட்டுவார்.
- மண்டியடவு, ததிங்கிணதொம் அடவுகளின் தாள அங்ககக்குறியீடுகளை எழுதுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- மாணவர் ஏற்கனவே செய்முறைப் பகுதியிற்கற்ற மண்டியடவு, ததிங்கிணதொம் அடவினை மீட்டல் செய்து கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- இவ்வடவின் சொற்கட்டை ஆசிரியர் கொலுப்பித்துக்காட்டி கீழ்வரும் விடயங்களை நினைவுபடுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுதல்.
    - மண்டியடவு, ததிங்கிணதொம் அடவுகள் ரூபகதாளத்தில் அமைந்துள்ளது.
    - ரூபகதாளத்தின் மொத்த அட்சரம் 6 முதலிற் தாள அங்கங்களுக்குள் அடங்கும் சொற்கட்டுக்களை மாத்திரம் எழுதுவதற்குப் பயிற்றுவித்தல்.
    - ஆசிரியர் சொற்கட்டினைப் போட்டுக் காட்ட மாணவர் அவதானித்துக் குறிப்பெடுத்தல்.
    - இதே போன்று மத்திம, துரித காலங்களில் சொற்கட்டினை எழுதப்பணித்தல்.

- மாணவர் சுயமாக எழுத இடமளித்து ஆசிரியர் அவதானித்தல்.
- பின் தங்கிய மாணவரை அவதானித்து நெறிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- மண்டி அடவின் சொற்கட்டினைக் கூறுவார்.
- மண்டி அடவினை தாள அங்கக்குறியீட்டுடன் எழுதுவார்.
- ததிங்கிணதொம் அடவின் சொற்கட்டினைக் கூறுவார்.
- ததிங்கிணதொம் அடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவார்.

**தேர்ச்சி 5.0 :-** நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 5.3 :-** இலங்கையின் பாரம்பரிய நடனத்தின் கலாசாரப் பின்னணியை அறிவார்.

**செயற்பாடு 5.3.1 :-** இலங்கையின் பாரம்பரிய நடனமான கண்டிய நடனத்தைப் பற்றி அறிவோம்.

**பாடவேளைகள் :-** 03

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

- காணொளி இறுவட்டு.
- கண்டிய நடனம் பற்றிய சுருக்கக் குறிப்புகள்.

**கற்றற்பேறுகள் :-**

- இலங்கை வாழ் சிங்கள மக்களின் சாஸ்திரிய நடனமொன்றான கண்டிய நடனத்தினை ஆராய்ந்து குறிப்பிடுவார்.
- அதன் தோற்றத்தைக் கூறுவார்.
- அதன் வகைகளைப் பட்டியற்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :-**

- காணொளி இறுவட்டினைக் காட்சிப்படுத்தல்.
- பார்வையிட்ட கண்டிய நடனத்தினைப் பற்றிக் கலந்துரையாடல்.
- கண்டிய நடனத்தின் வகைகள் பற்றிக் கலந்துரையாடல்.
- சுருக்கக் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :-**

- கண்டிய நடனம் பற்றி அறிந்து கூறுவார்.
- கண்டிய நடனங்களின் வகைகளை பட்டியற்படுத்துவார்.